**O.S.157 of 2021**

Date : 20.02.2025

பி.சா.1 : தங்கராஜா

<u>பி.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் ஆழ்வாநேரியில் குடியிருந்து வருகிறேன். நான் எனது தாத்தா காலத்தில் இருந்து 100 வருட காலங்களாக வசித்து வருகிறோம். வழக்கை தாக்கல் செய்துள்ள சாமுவேல் என்பவரை எனக்கு 30 வருடங்களாக தெரியும். சாமுவேல் நாடார் மற்றும் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்னென்ன என்று எனக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாமுவேல் நாடார் எனக்கு தாத்தா உறவு முறை ஆகும். சாமுவேல் நாடார் வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் எனது தாத்தா வாங்கிய இடத்தை சாமுவேல் என்பவர் கேட்டு வழக்கு போட்டுள்ளார். சாமுவேல் என்பவர் இடம் என சொல்லி வழக்கு போட்டுள்ளார். வழக்கு சொத்து சர்வே எண்.383/6 அதன் விஸ்தீரணம் 95 ஏர் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி 95 ஏர் நிலமும் வாதி சாமுவேல் பெயரிலும் மற்றும் தேவ இரக்கம் என்பவர் பெயரிலும் இருந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் 1964 செட்டில்மெண்ட் காலத்தில் பட்டாவில் சாமுவேல் மற்றும் தேவ இரக்கம் பெயரிலும் இருந்தது என்றால் சரிதான். சாமுவேல் மற்றும் தேவ இரக்கம் அவர்களுடைய சிறு வயதில் இருந்தே அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் தாத்தா தங்கசாமிதான் அனுபவித்து வந்தார். என் தாத்தா ஐயா துரை நாடாரிடம் இருந்து 1979 ல் கிரையம் வாங்கினார். ஐயா துரை நாடாருக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் எழுதி கொடுத்தார் என்றால் அவருடைய அனுபவ பாத்தியத்தின் அடிப்படையில் எழுதி கொடுத்தார். ஐயா துரை பெயரில் எந்த விதமான கிரைய ஆவணங்களோ வருவாய் துரை ஆவணங்களான பட்டா சிட்டாவோ இல்லை என்றால் சரிதான். ஐயா துரை என்பவர் பெயரில் ஆவணங்கள் உள்ளதாக எந்த விதமான ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.383/6 ஆனது மூன்று உட்பிரிவுகள் கொண்டது என்றால் சரிதான். சர்வே எண்.383/6 ன் மொத்த சொத்துக்களும் சாமுவேல் மற்றும் தேவ

இரக்கம் ஆகியோர்களின் பெயரில்தான் பட்டா இருந்தது என்றால் சரிதான். சர்வே எண்.383/6 அது A, B, C என்று மூன்று உட்பிரிவுகளை கொண்டது என்றால் சரிதான். சர்வே எண்.383/6A 63 ஏராக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.383/6B 14 ஏராக பிரிக்கப்பட்டு ரோடாக மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.383/6C 18 ஏராக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுதான் வழக்கு சொத்து என்றால் சரிதான். அது செண்டு கணக்கில் 45 செண்டாக உள்ளது என்றால் சரிதான். என்னுடைய தாத்தா கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் பகுதி எந்த உட்பிரிவில் வருகிறது என்று அவருடைய கிரைய பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். மேலும் 45 செண்டை பொறுத்துதான் நான்கு எல்கைகள் வருவாய் துறை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறுதலாக உள்ளது. இன்றைய தேதி வரையிலும் எனது தாத்தாவிற்கு கிரையம் கொடுத்த அய்யா துரை நாடாருக்கு எவ்வாறு பாத்தியம் என்று விசாரணை செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி அய்யா துரை நாடார் இறந்து விட்டார். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. அவருக்கு வாரிசுகள் உள்ளனர். மூன்று வாரிசுகள் என நினைக்கிறேன். ஒரு பெண் வாரிசு மட்டும் இருக்கிறார். அவரை மட்டும் எனக்கு தெரியும். அய்யா துரை நாடாருக்கு சொத்து இல்லை என்பதால்தான் அவருடைய வாரிசுகள் விவரம் மற்றும் அவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் சட்டபடியாக கிரைய ஆவணங்கள் பெற்றிருந்தால் விசாரணை செய்திருப்பேன் என்றால் சரியல்ல. என்னுடைய தாத்தா பெயர் தங்கசாமி என்பதாகும். என் தாத்தா எப்போது இறந்தார் என்றால் சரியாக எனக்கு நியாபகம் இல்லை. தாத்தா இறந்தால்தான் என் தகப்பனாருக்கு சொத்து வரமுடியும் என்பதால் என் தாத்தாவின் இறப்பை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் என் தாத்தாவின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தாவிற்கு ஒரு பையன் இரண்டு பெண்கள் உண்டு. மேற்படி விவரத்தை நான் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் தகப்பானருக்கு சொத்தை பொறுத்து எந்தவிதமான ஆவணமும் தாத்தா எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக கொடுத்ததாக எந்தவிதமான ஆவணங்களும் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்து சர்வே எண்.386/6c ல் 45 செண்டு உண்டு என்றும் உண்மைக்கு புறம்பான வழியில்

ஆவணத்தை உற்பத்தி செய்ததால்தால்தான்  25 செண்டு என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.